பதுங்குதலும் பாய்தலும்

சிறிலங்காவின் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விதித்த கிளிநொச்சி நகரத்தை மீட்பதற்கான காலக்கெடு முடிந்துபல வாரங் களாகிவிட்டன. ஆனால் இன்னும் கிளிநொச்சி யைப் பிடித்தபாடில்லை. பொதுவாக இலங்கை யின் இனப்பிரச்சனையும், நான்காம்கட்ட ஈழப்போரும் ஒரு முக்கியமானகாலகட்டத் திற்குள் தற்போது பிரவேசித்திருக்கின்றது. அதாவது இலங்கைஅரசாங்கம்எந்தவிதமான அழுத்தங்கள்தம்மீதுவந்தாலும்தாம்இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தப் போவதில்லை. எனத் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

2007 இன் ஆரம்பத்தில் வன்னிமீதான நடவ டிக்கையை சிறிலங்கா இராணுவம் ஆரம்பித் தபோது காணப்பட்ட படைகளின் வேகம் தற்போது இல்லை என்றே கூறலாம். படைகள் வன்னிமீது தாக்குதலை ஆரம்பித்தபோது விடுதலைப் புலிகள் கடுமையான எதிர்ப்பைக் காட்டியிருந்தனர். பின்னர் திடீரென தமது போக்கைத் தளர்த்தி பின் நகர்ந்திருந்தனர்.

அந்தத் தருணத்தில் படைகளின் அறிக்கை களைப் பார்த்தால் தெரிந்திருக்கும் ஆரம்பத் தில் தினமும் பெரிய பிரதேசங்களை தாம் மீட்டுவிட்டதாக கூறினார்கள். அதாவது நகரங்க ளைக்கைப்பற்றிவிட்டோம் என அறிவித்தார்கள் பின்னர் கிராமங்கள், தெருக்கள், முகாம்கள் எனமாறி தற்போது காவலரண்கள் என்று ஆகிவிட்டன. அதாவது ஒருசில காவலரண் களைக் கைப்பற்றுவதற்கே மிகுந்த இழப்பைச் சந்திக்க வேண்டியுள்ளது அந்த அளவுக்கு வன்னிக்களமுனை இறுக்கமடைந்துள்ளது என்றே சொல்லவேண்டும்.

வன்னியில் பருவமழை ஆரம்பித்து விட்டது ஆனால் இன்னும் உக்கிரமடையவில்லை. எனச் சொல்வதே பொருத்தமானது. இருந் தாலும் படையினர் கடந்த வாரங்களில் புலி களுடன் மட்டுமல்ல மழை வெள்ளத்துட னும் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு ள்ளது. சர்வதேச அரசியல் மாற்றங்கள் நிகழமுன்னர் தாம் கிளிநொச்சியை அல்லது பூநகரியைக் கைப்பற்றி விடவேண்டும் என்று படையினர் துடியாகத் துடிக்கின்றனர்.

படையினர் தற்போது தமது முழுக் கவனத்தினையும் அக்கராயன், நாச்சிக்குடா மீதே விழுந்துள்ளது. கிளிநொச்சியிலிருந்து 15 கி.மீ. தென் மேற்கே உள்ள அக்கராயன் நோக் கிப் படைகள் கடந்த இரண்டு மாதங்களாக முன்னகர்ந்தும் பயனேதும் கிடைக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். இருந்தபோதும் இந்தக்கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் பெழுது படையினர் அக்கராயன் மற்றும் ஜெயபுரம் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி விட்டதாக அறிவித்துள்ளனர். ஆனால் குறித்து விடுதலைப்புலிகளின் அறிக்கைகள் இதுவரை வெளியாகவில்லை.

எனினும் இப்பகுதியில் படைகள் புலிகளின் நிலைகளை உடைத்துக்கொண்டு முன்னகர முயன்றபோது புலிகள் முன்னரங்கநிலை களிலிருந்து சற்றுப் பின்நகர்ந்து படைகளை கொட்டும் மழைக்குள் உள்ளிழுத்து இலகு வாக தாக்கியிருக்கிறார்கள் புலிகள் இதன் போது 47 படைகள் பலியாகியிருக்கின்றன.

அத்துடன் படைகள் கடந்த 16ஆம் திகதி நாச்சிக்குடாவுக்கு வட கிழக்காக 13.5 கி.மீ. தூரத்திலுள்ள மணியங்குளத்தைக் கைப்பற்றி யிருக்கின்றார்கள். மேலும் கடந்த 28.10.08 படைகள் முறிகண்டி - அக்கராயன் வீதியைப் பிடிப்பதற்கு முயன்று இயலாத நிலையில் பின்நகர்ந்திருக்கின்றர். இதன்போது 60 படையினர் கொல்லப்பட்டதாகவும் 100 ற்கும் அதிகமானோர் காணமடைந்ததாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் கடந்த வாரம் 57 வது டிவிசன் ஏ9 க்கு அருகாகஉள்ளபனிக்கன்குளம், கிழவன்குளம் ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட முன்ன கர்வும் முறியடிக்கப்பட்டுள்ளது.

களமுனைப் பதிவுகள்

பதிப்பிப்பவர் வன்னியன்

வன்னிக்களமுனை இவ்வாறு புலிகளின் எதிர்த்தாக்குதலால் இறுக்கமடைந்து செல்ல வன்னிக்களமுனைக்கு வெளியேயும் போரா னது விரிந்துசென்றுள்ளது என்பது மறுக்க முடியாது. இதனைக் காட்டுமுகமாக கடந்த 22 ஆம் திகதி யாழ்க்குடா நாட்டில் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்ட எம்.வி. நிமலவ, எம்.வி.றுகுணு ஆகிய கப்பல்கள் மயிலிட்டிக் கடற்பரப்ப அண்டி தரித்துநின்ற போது அவற் றின்மீது கரும்புலித்தாக்குதல் நடாத்தப்பட் டுள்ளது. அந்தத் தாக்குதலுக்குப் பயன் படுத்தப்பட்ட புதிய வடிவத்துடன் அமைக்கப் பட்டசிறியரகப்படகானதுபடைகளைவியப்பில் ஆழ்த்தியிருக்கின்றது. அதாவது இப்படகானது ராடர்களின் கண்ணில் மண்ணைத்தூவிவிட்டுச் செல்லக்கூடிய'ஸ்ரெல்த்'தொழில்நுட்பத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க கிழக்கு மாகாணத் தில் தற்போது புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமை படையினரை அச்சத் திற்குள் உள்ளாக்கியுள்ளது. பொதுவாக தினமும் குறைந்தது ஒரு சிறிய தாக்குதலாவது இடம்பெறுகின்றது. அந்தவகையில் கடந்த 27ஆம் திகதி அதிகாலை செங்கலடியில் அமைந்துள்ள பிள்ளையான் குழுவின் அலுவல கத்தில் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. அதாவது பிள்ளையான் குழுவிற் குள் ஊடுருவிய விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினரே இத்தகைய தாக்கு தல்களை நடாத்தியதாக தெரிவிக்கப்படு கின்றது. இதன்போது பிள்ளையான் குழுவைச் சேர்ந்த நான்கு பேர் கொல்லப்பட ஆறு பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர். விடுதலைப்புலிகள் பிள்ளையான் குழுவிற்குள் ஊடுருவி அவர் களுடன் இணைந்து செயற்பட்டு தக்க தருணம் வரும்போது அவர்களைத் தாக்கிவிட்டு ஏற்கனவே மட்டக்களப்பினுள் ஊடுருவியுள்ள விடுதலைப் புலிகளுடன் இணைந்துள்ளனர்.

செங்கலடியிலுள்ள பிள்ளையான் குழுவின் முகாமுக்கு 100 மீற்றர் தொலைவில் தான் இராணுவமுகாம் அமைந்துள்ளது. தாக்குதல் நடந்த அன்று முகாமில் 11 பேர் நின்றதாகவும் இதன்போது பிள்ளையான் குழுவிற்குள் ஊடுருவியுள்ள புலிகள் தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றதாக இராணுவம் கூறுகி றது. இதனை அடுத்து பிள்ளையான், கருணா ஆகியோர் அச்சமடைந்திருப்பதாக அறிய முடி கின்றது. அத்துடன் இராணுவமும் இவர்கள்மீது ஒரு சந்தேகக் கண் கொண்ட பார்வையையும் ஏற்படுத்த வாய்ப்பாக அமைந்துள்ளது. அதா வது தற்போதிருக்கும் பிள்ளையான் குழுவில் யார் விடுதலைப்புலிகள். யார் உண்மையான கருணா குழு உறுப்பினர்கள் என அடையா ளம் காணமுடியாத நிலையில் அவ் ஒட்டு மொத்த பிள்ளையான் குழுவினரையும் இராணுவம் சந்தேகக் கண் கொண்டு நோக்க ஆரம்பித்துவிட்டது என்றே சொல்லாம். இதில் ஒரு வேடிக்கையான விடயம் என்னவெனில் பிள்ளையான் தனது சகாக்களை சந்திக்க கூடத் தற்போது அச்சத்தில் இருப்பதாகவும் அறிகின் றோம். ஆக மொத்தத்தில் இந்த உளவியல் போரில் வெற்றி பெற்றது விடுதலைப் புலிகளே எனலாம்

முன்னதாக கடந்த சனிக்கிழமை மட்டக் களப்பு வவுணதீவுப் பகுதியில் இராணுவத் தினருடன் சேர்ந்தியங்கும் தமிழ்த்துணை இராணுவக் குழுக்களின் மினிமுகாம் ஒன்று ஜெயந்தன் படையணிகளினால்தாக்கியழிக்கப் பட்டதும் இதன்போது படையினர் தரப்பில் இருவர் கொல்லப்பட அயதங்களும்புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன. ஆகவே மொத் தத்தில் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் மீள் பிரசன்னமானது ஸ்ரீலங்காப் படைகளை மட்டுமல்ல வன்னிக் களமுனையின் போக்கையும் ஒரு தேக்கநிலைக்குக் கொண்டு செல்லப் போகின்றது என்பது புலனாகிறது.

அடுத்து தென்னிலங்கை ஊடகங்களையும் மக்களையும் பரபரப்பாக்கியுள்ள ஒரு விடயம் வான்புலிகளின் தாக்குதலாகும். அதாவது வன்னி வான்தளத்திலிருந்து இலாவகமாகப் பற்ந்து வந்த புலிகளின் இரு விமானங்கள் நள்ளிரவு 11.50 அளவில் மன்னார் தள்ளாடி இராணுவமுகாம் மீது மூன்று குண்டுகளை வீசிச் சென்றது. இதன்போது ஒர படைச்சிப்பாய் பலியாக மூன்று பேர் காயமடைந்தனர். இதன் எதிரொலியாக கட்டுநாயக்காவில் இருந்து புறப்பட்டுச் சென்ற மிக் 27 விமான ங்கள் வன்னி வான்பரப்பில் பரா வெளிச்சக் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின. அவர்கள் தாக்குதல் நடாத்தி சரியாக 40 நிமிடநேரத்தில் கொழும்பு களனிதிஸ்ஸ மின்வழங்கு நிலையத்தின் மீது தாக்குதலை நடாத்தின இதன்போது குளிரூட்டி அறை உட்பட்ட பகுதிகள் சேதமடைந்திருந்தன.

ஆரம்பத்தில் இலங்கை அரசாங்கம் இச்செய்திகளை மறுத்திருந்தாலும் பின்னர் இதை உறுதிப்படுத்தியிருந்தன. களனிதிஸ்ஸ மின்நிலையம்வான்புலிகள் மேற்கொண்ட தாக் குதலினால் நாள் ஒன்றுக்குசுமார் 240 லட்சம் ரூபாய்கள் நட்டம் ஒற்படுவதாக இலங்கை மின் சாரசபை தெரிவித்துள்ளது. இவை எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு நிகழலாம் என அச்சமும் வெளியிடப்பட்டுள்ளது.

வான்புலிகளினால் 2007 ஆண்டு மார்ச் மாதம் நடத்தப்பட்ட முதலாவது தாக்குதலை கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்தில் மேற் கொண்டதைத் தொடர்ந்து இலங்கை அரசாங் கம் இந்தியாவிடம், சீனாவிடம், பாகிஸ்தானிடம் என்று மாறி மாறி ஓடி ஓடிச் சென்று ராடர்க ளையும், விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் வாங்கிக் குவித்தது. அந்த வகையில் இந்தியா உடனடியாக தமது முப்பரிமாணத் திறன் கொண்ட இந்திரா-2 என்ற ராடர் கருவியை இலங்கைக்கு வழங்கியது. இதன்பின் தம் பட்டமடித்த அரசாங்கம் இனி வான்புலிகளின் விமானம் வந்தால் சுட்டு வீழ்த்திவிடுவோம் என்றும், அவர்கள் வன்னியிலிருந்து பறப்புக் களை மேற்கொண்டால் எழுந்த இடத்திலேயே சுட்டு வீழ்த்தி விடுவோம் என்றெல்லாம் தமது வாய்க்கு வந்தபடி அறிக்கைகளை விட்டனர்.

அதன்பின் வான்புலிகள் படிப்படியாக பலாலி கூட்டுப்படைத்தளம், கொழும்பு கொலண் ணாவ எண்ணைக் குதம், அனுராதபுரத் தாக் குதல், மணலாறு முன்னரங்கத் தாக்குதல், திருகோணமலைத் துறைமுகம், வவுனியா ஜோசப் படைத்தளத் தாக்குதல் என்ற வளர்ந்து தனது எட்டாவது தாக்குதலாக தள்ளாடித் தளத்திலும் ஒன்பதாவது தாக்குதலாக களனிதிஸ்ஸ மின் நிலையத் தாக்குதலும் என்று தொடர்கின்றது.

பலகோடி செலவுகளில் கொள்வனவு செய்யப்பட்ட நவீன விமான எதிர்ப்பு ஏவுகணை களை அரசாங்கம் வாங்கி வைத்துக் கொண்டு வான்புலிகள் வந்து தாக்குதல் நடாத்திய போது ஏதோ தீபாவளிக்கு பட்டாசு கொழுத் தியது போல வானை நோக்கி விளாசித் தள்ளியி ருக்கிறார்கள். ஆனாலும் பலன் எதுவும் இல்லாது போக தற்போது தம்மிடமுள்ள வான் பாதுகாப்புக் கருவிகள் 2000 அடி தூரம் வரையே செல்லக் கூடியன. ஆனால் புலிகள் 2000 திற்கும் உயரமான இடத்திலிருந்து தாக்குதல் நடாத்திவிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்று சாட்டு வேறு சொல்லியிருக்கிறார்கள்.

இதில் மிக வேடிக்கையான விடயம் என்ன வெனில் இலங்கையில் இராணுவம் பயன் படுத்தும் ராடர்கள் ஒன்றிலும் வான்புலிகள் வந்ததற்கான தடயங்கள் இல்லையாம். இதனால் தாங்கள் இது குறித்து மேலதிக விசார ணை நடாத்துவது கடினம் என்றும் விமானப் படை கூறியிருப்பதுதான். ஆகவே இதன் மூலம் வான்புலிகள் இலகுரக விமானங்களைப் பாவிக் காது வேறு நவீன விமானங்களைப் பாவித் தார்களா? அல்லது ராடர்களின் கண்களில் மண்ணைத் தூவக் கூடிய நவீன தொழில் நுட்பத்தைக் கையாண்டார்களா என்பதில் இலங்கை அரசு குழப்பத்தில் இருக்கின்ற தாகத் தெரிகிறது. கடந்த 22 திகதி காங்கேசன் துறையில் புலிகள் நடாத்திய கரும்புலித் தாக்குதலிற்கு பயன்படுத்தியபுதியபடகுக்கட்டு மானக் குழப்பத்திலிருந்து நீங்கு முன் படைகளுக்கு மீண்டும் ஓர் அடி விழுந்தி ருக்கிறது.

ஆகவே வன்னிக் களமுனையானது கள முனைகளுக்கு அப்பால் விரிவடைந்து சென்று கொண்டிருப்பது படைகளுக்கும், அரசாங்கத் திற்கும் மேலும் சிக்கலை ஏற்படுத்தும். எனவே மாவீரர் நாளும் நெருங்கி வரும் வேயில் களமுனைகளில் விடுதலைப் புலிகளின் நகர்வுகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது.

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு வகைகள், பசுமையான மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், பாத்திர வகைகள், தமிழ், இந்தி சினிமா DVD, CD, VHS போன்றவற்றை பெறுவது மாத்திரமன்றி

கடல் கடந்து வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவதற்கும் அழையுங்கள்.... 020 8905 7765

MARUTHI CASH & CARRY

15 - 17
Queensbury Station Parade
Queensbury
HA8 5NR

Tel: 020 8952 66 55
020 8381 3442
Fax: 020 8905 7546